

ptz

heilpädagogische früherziehung

2010 – tamilisch

# குணமாக்கும் நிபுணத்துவ ஆரம்ப வளர்ப்புநெறி (HFE)

ஒரு பிள்ளைக்கு படிப்படியான வளர்ச்சி இல்லாதவிடத்து, பெற்றோர் அல்லது சூழ உள்ளவர்கள் தங்களை ஒரு குழப்பமான நிலைக்கு இட்டுச்செல்வர். அனைத்திற்கும் மேலாக, இதற்கான ஒரு சரியான காரணத்தை வெளியே பார்க்க தெரிவதில்லை.
ஒரு பிள்ளைக்கான விளையாட்டு அதன் வயதுக்கு ஏற்றமாதிரி இல்லாமல் இருக்கலாம். தனது வயதான பிள்ளைகளுடன் ஒப்பிடும்போது இந்தப் பிள்ளை பேசுவதற்கு தாமதமாகியிருக்கலாம். பொருட்களுடனோ அல்லது மனிதர்களுடனோ பழகும்போது தனக்கு பழக்கமில்லாதவாறு நடந்து கொள்ளலாம். இவரது முழு வளர்ச்சியும் தாமதமாகியோ அல்லது வழமைக்கு மாறானதாகவோ நடந்து கொள்ளலாம்.
இந்த குணமாக்கும் நிபுணத்துவ ஆரம்ப வளர்ப்புநெறி சொந்த விருப்பிலும் கட்டணமின்றியும் வழங்கப்படுவதுடன், இவ்வாறான வேளையில் உதவிசெய்து ஆலோசனைகளை வழங்கி ஆதரவு கொடுக்கும். இது பிள்ளையின் நாளாந்த வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதுடன் சுற்றுச் சூழல் மற்றும் குடும்பத்தால் செய்ய முடிந்தவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

HFE இன் அனைத்து உதவி வழங்கல்களும் வைத்தியரின் வேண்டுதலின் பேரிலேயே இடம்பெறும்.

## தெளிவான முறையிலான விளக்கமளிப்பு

அதிக வேளைகளில் பெற்றோர் அல்லது பிள்ளைகளுக்கான வைத்தியர், பிள்ளை வளர்ச்சியில் தாமதமாவதை கண்டு கொள்வார்கள். பிள்ளைகளின் விளையாட்டுக்குழுத் தலைவர்கள் அல்லது தாய்தந்தையருக்கு ஆலோசனை வழங்குவோர் அல்லது பாலர் பாடசாலையில் தொழில்புரிவோருக்கு இப் பிள்ளை வித்தியாசமாகப் படுவதுடன் அதுபற்றிய விளக்கத்தைப் பெறுவது அவசியம் என எண்ணலாம். வைத்தியரின் மருத்துவ விளக்கத்துடன் சேர்த்து மேலதிகமாக உளரீதியான வளர்ச்சிக்கான விளக்கத்தை நாம் கொடுக்கிறோம்.
இந்த விளக்கத்தில் அடங்கியிருப்பவை:

- தற்போதைய நிலை பற்றிய கலந்தாலோசனை மற்றும் முன்வரலாறு
- விளையாடும் நிலைபற்றிய அவதானிப்பு
- சாதாரண முறையிலான பரிசோதனை
- வளர்ச்சிப்படி பற்றிய அட்டவணையைப் பிரயோகித்தல்
- பெற்றோருக்கான கேள்விப்படிவம்

இந்த தெளிவானதும் விரிவானதுமான விளக்கம், பிள்ளையின் வளர்ச்சி நிலை எவ்வாறு உள்ளது என்பது பற்றி அடங்கியிருப்பதுடன், தனிப்பட்ட முறையில் அவரைப் பற்றிய முழு விடயத்தையும் அவரது செயற்பாடுகளையும் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் தெரிவித்துக் கொள்ளும்.
இந்த அடிப்படையைக் கொண்டு –நிபுணத்துவ குணமாக்கும் ஆரம்ப வளர்ப்புநெறி– ஆம் அல்லது இல்லை– என விருப்பப்படி முடிவு செய்யலாம் அல்லது இதற்குப் பதிலான வேறு முறைகள் பற்றி கதைத்துக் கொள்ளலாம்.

## பெற்றோருக்கான உதவியும் ஆதரவும்

பெற்றோருக்கும் அல்லது பொறுப்பாளர்களுக்கும் வளர்ப்புக் குறித்து பிரச்சினையான வேளைகளில் நாங்கள் உதவி செய்து ஆதரவு வழங்குவோம். இதனால் நாங்கள் பெற்றோரின் அல்லது பொறுப்பாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதுடன் அவர்களின் சொந்த வசதிகளுக்கு மேலதிக ஒத்துழைப்பு வழங்கி பிள்ளையின் வளர்ப்பு முறையில் ஒரு உறுதியான பார்வையை வளர்ச்சியுறச் செய்வோம்.
ஆலோசனை என்பதில் உதவி மற்றும் பாலர் பாடசாலையில் நுழைவு பெறுவதற்கான பரிந்துரையும் அடங்குகின்றது.
HFE இன் உதவி வழங்குதலில் குடும்ப சிகிச்சைக்கான தலையீடு அல்லது தம்பதிகளுக்கு அல்லது சேர்ந்து வாழ்பவர்களுக்கிடையேயான பிரச்சினைகளுக்கான சிகிச்சை அடங்காது.

## ஒழுங்கான முறையில் பிள்ளையை ஊக்கப்படுத்துதல்

HFE என்பது பிறப்பு முதல் பாலர் வகுப்பில் நுழையும் வரை ஒரு பிள்ளைக்கு வழங்கப்படும் நிபுணத்துவம் வாய்ந்த–கற்கைநெறியாகும். நிபுணத்துவ குணமாக்கும் கற்கை நெறிப்படி நாங்கள் பிள்ளையை பின்வரும் விடயங்களான: தெரிந்து கொள்ளுதல், பேச்சு, அசைதல், சமூக–, விளையாட்டு– மற்றும் கற்கும் நிலையில் ஊக்குவித்து உதவுகின்றோம்.
இதன்போது சிறு பிள்ளை ஒரு விளையாட்டு உலகத்தை விரும்புவதுடன், அந்த விளையாட்டிலேயே ஊக்கத்தைச் செலுத்தலாம். இப்படியான வேளையில் நாங்கள் வித்தியாசமான விதமாக, நிபுணத்துவம் வாய்ந்த, உளரீதியான, மருத்துவ மற்றும் சமூகவியல் விடயங்களை அறிந்துள்ளபடி வளர்ச்சியடையப் பணியாற்றுவோம்.
HFE தொடர்ந்து கற்கை மற்றும் அனுபவரீதியான வளர்ச்சியை சேர்த்துக் கொள்ளும். ஆகவே பிள்ளையை பராமரிப்பவர்கள் நேரடியாக சேர்ந்து செயற்படுவது விரும்பப்படுவதுடன் அது தேவையாகவும் உள்ளது. ஒன்றாக இணைந்து ஊக்குவிக்கும் திட்டத்தை வகுத்து, அதை கணித்துக் கொள்வதுடன் அதன் வளர்ச்சியையும் கண்காணித்துக் கொள்ளும்.
நிபுணத்துவ குணமாக்கும் ஊக்குவிப்பு, நம்பிக்கையான சூழமைவில் வீட்டிலேயே இடம்பெறும் அல்லது எமக்குச் சொந்தமான இல்லங்களில் நடைபெறும். சந்தர்ப்பங்களைப் பொறுத்து நாம் தனிப்பட்ட முறையில் நேரத்தை ஒதுக்கியோ அல்லது சிறு குழுவாகவோ பணியாற்றுவோம். நிபுணத்துவ குணமாக்கும் ஊக்குவிப்பின் பெறுமதி பிள்ளையின் மற்றும் குடும்பத்தின் தேவைகளைப் பொறுத்து பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

## இதன் நோக்கம்: இயலுமான அளவில் மிகத் திறமையான இணைந்த ஊக்குவிப்பு

HFE இன் நோக்கம் வளர்ச்சியடையக்கூடிய பிள்ளைகளை வீட்டிலும் அவர்களது சூழலிலும் மிகத் திறமையான ஒன்றிணைந்த ஊக்குவிப்பை வழங்குவதாகும். பிள்ளைகளின் திறமைகள் அவர்களது வாய்ப்புகளுக்கு ஏற்றபடியும் ஊக்குவிப்புத் திட்டத்தின்படியும் மேலும் விரிவாக்கப்பட வேண்டும்.